[பத்தாவது பாராளுமன்றம் (முதலாவது கூட்டத்தொடர் ) – முதலாவது கூட்டம்]

இல. 1.]

# பாராளுமன்றத்தின் அலுவல் ஒழுங்கு

## 2024, நவம்பர் 21, வியாழக்கிழமை, மு. ப. 10.00 மணிக்கு

1. **கூட்டத்தினைக் கூட்டுதல் பற்றிய கௌரவ சனாதிபதியினது பிரகடனங்களைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல்.**

2. ***சபாநாயகர் தேர்வு:***

(பாராளுமன்ற நிலையியற் கட்டளை 4)

"4. சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைமுறை பின்வருமாறு அமைதல் வேண்டும்:-

(அ) சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உறுப்பினரொருவரை முன்மொழி வதற்கு விரும்புகின்ற எவரேனும் உறுப்பினர், தேர்ந்தெடுக்கப்படின் அத்தகைய உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) எவரேனும் உறுப்பினர் செயலாளர் நாயகத்தை விளித்து, அப்போது பாராளுமன்றத்தில் சமுகமளித்துள்ள வேறெவரேனும் உறுப்பினரை அதன் சபாநாயகராக முன்மொழிதல் வேண்டுமென்பதுடன், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிகின்றாரோ அந்த உறுப்பினரைச் சபாநாயகராகப் பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமரும்படி பிரேரித்தலும் வேண்டும். முன்மொழிவானது வழிமொழியப்படுதல் வேண்டும்; ஆனால் விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

(இ) சபாநாயகராக ஓர் உறுப்பினர் மட்டுமே அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், அத்தகைய உறுப்பினர், வினாவின்றியே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனச் செயலாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப் படுதல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், ஐந்து நிமிடங்களிற்கு வாக்கழைப்பு மணி அடிக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றம் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் ஒரு சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(ஈ) வாக்கெடுப்பொன்றின் நோக்கத்திற்காகச் செயலாளர் நாயகம், சமுகமளித்துள்ள ஒவ்வோர் உறுப்பினருக்கும் வாக்குச்சீட்டுப் பத்திரமொன்றைக் கொடுத்தல் வேண்டும். அதில், அத்தகைய ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் எவ்வுறுப்பினரின் சார்பாக வாக்களிப்பதற்கு விரும்புகின்றாரோ அவ்வுறுப்பினரின் பெயரை எழுதி, எழுதப்பட்ட பெயர் தெரியாதவகையில் வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் மடிக்கப்படுதலும் வாக்களிக்கின்ற உறுப்பினரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(உ) செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் செயலாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் வைத்து செயலாளர் நாயகத்தினால் எண்ணப்படுதலும் வேண்டும். வாக்கெடுப்பின் பெறுபேறுகள் செயலாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) (i) இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்பட்டு, முதலாவது வாக்கெடுப்பில், ஏனைய வேட்பாளர்களினால் பெறப்பட்ட கூட்டுமொத்த வாக்குகளிலும் பார்க்க அதிகமான வாக்குகளை வேட்பாளரெவரும் பெறாத சந்தர்ப்பத்தில், குறைந்தபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் தேர்தலிலிருந்து விலக்கப்பட்டு விடயத்துக்கேற்ப ஒரு வேட்பாளர் எஞ்சியுள்ள வேட்பாளரின் வாக்குகளைப் பார்க்க அல்லது எஞ்சியுள்ள வேட்பாளர்களின் கூட்டுமொத்த வாக்குகளைப்பார்க்க அதிகமான வாக்குகளைப் பெறும்வரை, ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர் விலக்கப்படுவதுடன் வாக்கெடுப்பானது புதிதாக மேற்கொண்டு நடாத்தப்படுதலும் வேண்டும்.

(ii) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையிலான ஏதேனும் வாக்கெடுப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று அவர்களுள் ஒருவர் (i) ஆம் உட்பந்தியின் கீழ் தேர்தலிலிருந்து விலக்கப்பட வேண்டியவராகவிருக்கும் சந்தர்ப்பத்தில், எவ்வேட்பாளர்களுக்கிடையே வாக்குகள் சமமாகவுள்ளனவோ அவ்வேட்பாளர்களுக்கிடையே எவர் விலக்கப்பட வேண்டியவர் என்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டிழுப்பின்மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இரு வேட்பாளர்களிடையேயான ஏதேனும் வாக்கெடுப்பில் வாக்குகள் சமமாகவுள்ள சந்தர்ப்பத்தில், இன்னொரு வாக்கெடுப்பு நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்கெடுப்பின் முடிவிலும் வாக்குகள் சமமாகவிருக்குமானால், அவ்வேட்பாளர்களுள் எவர் விலக்கப்பட வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(எ) வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் எண்ணப்பட்டதும் அவை ஒரு பெட்டியில் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரெனப் பிரகடனப்படுத்தப்பட்டதும், அப்பெட்டியானது பாராளுமன்றத்தின் முன்னிலையில் முத்திரையிடப்பட்டு, ஒரு பஞ்சாங்க மாதத்திற்குச் செயலாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். பின்னர், பாராளுமன்றத்திடமிருந்து பெறக்கூடிய ஏதேனும் பணிப்பிற்கமைய செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை அழித்துவிட்டு அதனைப் பாராளுமன்றத்திற்குச் சான்றுப்படுத்துதலும் வேண்டும்."

**3. பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை:**

(பாராளுமன்ற நிலையியற் கட்டளை 5)

"5. (1) தாம் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் வகைசெய்தல் வேண்டும். செயலாளர் நாயகத்தினால் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்து வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் உடனடியாகச் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகத்தினால் அதற்கென வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(3) ஏற்கனவே பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்ளாத ஓர் உறுப்பினர் பாராளுமன்றம் கூடுகின்ற எத்தினத்திலாவது செயலாளர் நாயகத்துக்கு அறிவித்ததன்மேல், சபாபீடத்தில் சமுகமளிக்கலாம் என்பதுடன் 22 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துவைக்கப்படுதலும் வேண்டும்; அதன்பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்".

**4. பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர் தேர்வு:**

(பாராளுமன்ற நிலையியற் கட்டளை 6 (2))

"6. (2) பிரதிச் சபாநாயகரதும், குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தேர்வு முறை, தேர்வைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர மற்றெல்லா விதத்திலும், கூடுமானவரை சபாநாயகரைத் தேர்வு செய்யும் முறைமையை ஒத்திருத்தல் வேண்டும்".

**5. குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு:**

(பாராளுமன்ற நிலையியற் கட்டளை 6 (2))

**6. சனாதிபதியின் செய்திகள்:**

*கௌரவ சனாதிபதி சபாகூடத்திற்குள் வருகை தந்ததன் பின்னர் பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது சபையின் அலுவல் ஒழுங்குகள் பின்வருமாறு அமையும் :-*

**7. கௌரவ சனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுதல்.**

**8. பிரேரணை முன்னறிவித்தல்:**

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 டிசம்பர் 03 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

**9. பாராளுமன்ற ஒத்திவைப்பு.**